ISSN:2582-9599



# தமிழ் நாடகமும் கிறித்தவ சமயமும்

**முனைவர் பி. திவ்யா**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு),**
**பாத்திமா கல்லூரி, மதுரை.**

69

**ஆய்வுச்சுருக்கம்**

சமயங்கள் மனிதனை நெறிப்படுத்தத் தோன்றியவையாகும். இன்று உலகில் நூற்றுக்கணக்கான சமயங்கள் காணப்படுகின்றன. எல்லா சமயங்களும் இறை அன்பையும், பிறரன்பையும் வலியுறுத்தி இறைவனை அடைய வழி சொல்லுபவையாக அமையினும் அந்நிலை அடைய ஒவ்வொரு சமயமும் தமக்கென குறிப்பிட்ட ஒரு கொள்கையை, கோட்பாட்டைக் கொண்டிருக்கின்றன. அப்படித் தமக்கான கொள்கையைப் பிறருக்கு அறிவுறுத்தி, தம் சமயக் கொள்கைகளின் சிறப்பினை எடுத்துக் கூறிப் பிறரைத் தம் சமயத்தின் பால் ஈர்க்கின்றனர். அவ்வாறு ஈர்க்க ஒவ்வொரு சமயமும் வெறும் போதனை அளவில் நில்லாமல் இலக்கியக் கலை வடிவங்களை ஊடகமாக்கி தம் சமயக் கருத்துக்களைப் பரப்புகின்றன. அப்படிச் சமயப்பரப்புதலுக்காக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் மிகுதியாய் பதியப்பட்டுள்ளன. ஆனால் அதைவிட மிகுதியாய் காண்போரைக் கவரும் கலை வடிவங்கள் பல சமயப் பரப்புதலைச் செய்துள்ளன. அவற்றிலும் மிகுதியாக காண்போரைக் கவர்ந்து கருத்தைப் பதியச் செய்யும் நாடகக் கலையானது மிகச் சிறந்த சமயப் பரப்பு ஊடகமாகக் காலம்தோறும் இயற்றப்பட்டு வருகின்றது. இந்நாடக வடிவத்தின் தோற்றமே சமயத்திடமிருந்து தோன்றியதாகவும் கூறுவர் இயல், இசை, நாட்டியம், நடிப்பு எனப் பல கலைகளின் கூட்டாகத் திகழும் இந்நாடக வகையைக் கிறிஸ்தவ சமயமும் மிகுதியாகக் கைக்கொண்டு வருகின்றது. தம் சடங்குகளிலேயே இத்தகு நாடகக் கூறுகளைக் கொண்டுள்ள கிறிஸ்தவம் சடங்குகளுக்கு வெளியே பல்வேறு வகையான நாடகங்களையும், சமய போதனைக்குப் பயன்படுத்துகின்றன. அவ்வகையில் தமிழகத்தில் சமயப் பரப்புதலுக்காக உருவாக்கப்பட்ட நாடக வடிவங்களை இவ்வாய்வு ஆராய்கின்றது.

**குறிசொற்கள்:** நாடகம், கிறித்தவம், வாசாப்பு, பாஸ்கா, பாவை, கூத்து.

**முன்னுரை:**

நாடகம் என்பது ஒரு கலை என்பதைவிட பல கலைகள் சங்கமிக்கும் கலைகளின் கூட்டமைப்பு என்பது குறிப்பிடற்குறியது. ஐம்புலன்களையும் தன்பால் ஈர்க்கும் திற் பெற்றமையால் நாடகக்கலை எந்தக் கருத்தையும் பெரும் திரளுக்குக் கொண்டு சேர்க்க ஏற்ற ஊடகமாக விளங்கியது. இதனை நன்கு உணர்ந்த சமய அறிஞர்கள் நாடகத்தை சம் சமயக் கருத்துக்களை மக்களிடம் சேர்க்கக் கருவியாக பயன்படுத்தினர். தமிழ்கத்திற்கு வந்த சமயங்களில், கிறித்தவ சமயம் நம் தமிழ் மண்ணில் கால் பதித்தது இயேசுவின் சீடரான தோமையார் காலத்தில் என்றாலும் அதன் வளர்ச்சி ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே நிகழ்ந்தது. அப்போது தமிழ் மொழியின் சிறப்பினை உணர்ந்து சமயம் பரப்ப வந்த அருட்தந்தையர் இலக்கியம் படைத்ததோடு பாமரர்களிடமும் கிறித்தவத்தை எடுத்துரைக்க நாடகத்தை சமயப்பரப்புதலுக்கான கருவியாக பயன்படுத்தினர். இதனால் கிறித்தவம் வளர்ந்ததோடு

மட்டுமல்லாமல் தமிழ் நாடகக்கலையும் புதிய நாடக வடிவங்களைப் பெற்றது. அப்படி தமிழ் நாடகங்களால் கிறத்தவமும், கிறித்தவத்தால் தமிழ் நாடகமும் வளர்ந்தமையை ஆராய்கின்றது இவ்வாய்வு.

**தொடக்ககால கிறித்தவத் தமிழ் நாடகங்கள்**

இந்திய மாநிலங்களில் தமிழகம் எந்த சமயங்களையும் இயல்பாக ஏற்றுக் கொள்ளும் தன்மையுடையதாகும். அவ்வகையில் கிறித்தவ சமயம் தமிழகத்தில் சிறந்து விளங்கும் சமயமாக உள்ளது. தமிழகத்தில் கிறித்தவம் தோன்றிய கி.பி. முதல் நூற்றாண்டிலேயே வந்துவிட்டதென்றாலும், கி.பி.16-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே நன்கு பரவியது. பரவத் தொடங்கிய நாட்களில் வேறு கலாச்சாரப் பின்னணியிலிருந்து வந்த சமயம் என்பதால் பல்வேறு சவால்களைச் சந்திக்க நேர்ந்ததென்றாலும் தமிழகக் கலை இலக்கிய வடிவங்களைக் கையிலெடுத்து கிறித்தவத்தைப் பரப்பினர். அதிலும் குறிப்பாக பல்வேறு நாடகங்களை நிகழ்த்தினர் “கிறித்தவ நாடகங்களாக ஞானத்தச்சன் நாடகம், தேவ சகாயம் நாடகம், அருளானந்தர் நாடகம், ஞானசவுந்தரி நாடகம் முதலானவைகளும் தோற்றம் பெற்றன”1 என அஸ்வகோஸ் குறிப்பிடுகின்றார். மேலும், “கிறித்தவ சமயத்தினர் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றினை ஆண்டிற்கு ஒருமுறை ‘பாஸ்கா பண்டிகை’ என்கிற பெயரில் தமிழகத்தின் பல இடங்களில் நடத்தி வந்துள்ளனர். இதே போல சமயப் பணியாற்றிய இறைத்தொண்டர்கள் குறித்தும் நாடகங்கள் நடத்தி வந்திருக்கின்றனர்”2 கிறித்தவர்களின் விவிலிய விளக்கக் கதைகள், இயேசு நாதர் வரலாறு முதலானவை கிறித்தவ சமய நாடகங்களாகப் படைக்கப்பட்டிருக்கின்றன.

**பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறித்தவத் தமிழ் நாடகங்கள்**

19 ஆம் நூற்றாண்டில் பல கிறித்தவ நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆதாம் ஏவாள் விலாசம், பூதத்தம்பி விலாசம், நல்ல சமாரித்தன் ஞானசௌந்த அம்மாள் விலாசம், எஸ்காத்தியார் நாடகம் முதலான நாடகத்தையும் நவாப் இராஜமாணிக்கம் ஏசுநாதர் நாடகத்தையும் சிறப்பாக நடத்தி மக்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தினார்கள். எல். பொன்ரத்தினம் ‘இதோ நமக்கு ஒருவர்’ என்ற நாடகத்தை எழுதியுள்ளார். “கத்தோலிக்கர் இலக்கியத்துறையில் புகழ் பெற்றிருப்பது போலவே கலைத் துறையிலும் சிறப்பு பெற்றிருந்தனர். குறிப்பாக அனுமந்தன்பட்டிப் புலவர் அந்தோணிமுத்து நாடகங்கள் இயற்றி மேடையேற்றி வந்திருக்கிறார். அவருடைய இஸ்தக்கியர் நாடகமும், ஞான சௌந்தரி நாடகமும் பல ஊர்களில் அரங்கேறின.”3 என்கிறார் முனைவர் விண்சென்ட் ஏற்கனவே தமிழில் இருந்த நாடகங்களில் தம் கருப்பொருளை ஏற்றி நாடகமாக்குதல் ஒரு புறமிருப்பினும் தம் சமயக் கதைக் கருவினை மையமாகக் கொண்டு புதுப்புது வடிவில் புதிய வகைமையை உருவாக்குவதும் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது.

**கிறித்தவத் தமிழ் நாடக வகைமைகள்**

கிறித்தவ சமய நாடகங்கள் பல. “இக்கால கட்டத்தில் (பதினேழு, தினெட்டாம் நூற்றாண்டுகள்) ஐரோப்பியரின் தமிழ்ப் பணியும் கிறித்துவின் இறை நம்பிக்கையும் தமிழுக்குப் புதுப்புது நாடக நூல்கள் 19-ஆம் நூற்றாண்டில் முழுவளர்ச்சிப் பெற்றுக் கிடைத்தன”4 என்கிறார்

ஆய்வாளர் ஒருவர். விலாசம், பள்ளு, நொண்டி நாடகம், குறவஞ்சி, கீர்த்தனை, நாட்டிய நாடகம் கூத்து போன்ற பழைய வகைமைகள் மட்டுமின்றி, வாசகப்பா, நாட்டுச்சவிட்டு, பாஸ்கா போன்ற புதியபல வகைமைகளும் உருவாகின. வாசகப்பா என்பது வாசாப்பூ எனவும், வாசகக்காப்பு எனவும் அழைக்கப்படுகின்றது. பாடலும் உரைநடையும் கலந்து புனிதர்களின் வாழ்வைக் கூறும் நாடகமாகும். இது திருவிழாக் காலங்களில் ஆலயங்களில் நடைபெறும் நாட்டுக்கூத்து, "சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகக் கத்தோலிக்க மக்களிடையே மிகப் பெரும் வரவேற்பைப் பெற்றக் கலை நிகழ்ச்சி. கிறித்தவப் புனிதர்கள் மற்றும் அடியார்களின் வரலாற்றை எடுத்துக்கூறுகின்ற நாடகம் ஆகும். இவ்வகை நாடகம் பல யாழ்ப்பாணத்தில் படைக்கப்பட்டன"5 . மரியதாசன் நாட்டுக்கூத்து, விசய மனோகரன் நாட்டுக்கூத்து, எய்தாக்கியர் நாட்டுக்கூத்து போன்ற நாட்டுக்கூத்துக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். பாஸ்கா என்பது இயேசுவின் வாழ்வை குறிப்பாக பாடுகள், மரணம், உயிர்ப்பை மையமாக்கக் கொண்ட நாடகமாகும். இது பெரும்பாலும் இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு விழாக்காலங்களில் நடத்தப் பெறும்.

**பாஸ்கா நாடகம்**

பாஸ்கா நாடகம் என்பது இயேசுவின் வாழ்வைக் கூறும் நாடகமாகும். பாடலும், உரைநடையும் கலந்த வடிவில் இயற்றப் பெறும் இந்நாடகம் இயேசுவின் உயிர்ப்புத் திருவிழாவை ஒட்டிய காலக்கட்டத்தில் இருநாட்கள் இரவில் நடத்தப்படும். முற்காலத்தில் கூத்தைப் போல நடத்தப் பெற்ற இந்நாடகங்கள் இன்று ஏற்பட்டுள்ள நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி ஒரு நவீன மேடை நாடகமாகவே நிகழ்த்தப் பெறுகின்றன.

உலகம் முழுவதும் நிகழ்த்தப் பெறும் பாடுகளின் நாடகம் தமிழகத்தில் உள்ள பாஸ்கா என்ற பெயரில் நடத்தப்படுகின்றது. தமிழகத்திற்கு மறைபரப் வந்த அருட்தந்தையர்கள் அதற்கான சிறந்த ஊடமாக நாடக வடிவினைக் கையிலெடுத்தனர். ஆலங்களில் வழிபாட்டின்போது வழிபாட்டு நிகழ்வுகளை நாடகத் தன்மையோடு அமைத்தனர். குறிப்பாக புனித வாரத்தில் இயேசுவின் பாடுகளை, இறப்பை எடுத்துரைக்கும் சிலுவைப் பாதையில் நாடக்க கூறுகளைக் புகுத்தினர் பின்னர் அவையே பாஸ்கா நாடகங்களாக மாறின. பாஸ்கா நாடக வளர்ச்சியை மூன்று நிலைகளில் கூறலாம். அவையாவன, பாவை பாஸ்கா, கூத்தாக பாஸ்கா, மேடை நாடகமாக பாஸ்கா.

**பாவை பாஸ்கா**

தொடக்க காலத்தில் பாஸ்கா நாடகங்களிலும் மனிதர்கள் நடிக்கவில்லை. நாடகத்தின் கதையை உரைநடையும், கவிதை நடையும் கலந்து போதிக்க அதற்குத் தக்கபடி பாவைகளை அசைத்தனர் இது பாவை பாஸ்கா அல்லது பொம்மை பாஸ்கா என்று அழைக்கப்பட்டது. ஐரோப்பா போன்ற மேலைநாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வந்ததே பாஸ்கா. எனினும் அங்கே இல்லாத பாவைகளைக் கொண்டு இயக்கும் முறை இங்கு மட்டும் நிலவக் காரணம் என்னவாக இருக்கும் என ஆராய்கையில் "இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மன் ஆகிய நாடுகளில் இயேசு தொடர்பான நாடகங்களில் மனிதர்கள் நடிக்கத் தமிழகத்தில் மட்டும் சுரூபபாஸ்கா அல்லது பாவை பாஸ்கா நாடகம் நடைபெறுவதற்கு மொழிச்சிக்கலும் காரணமாகும். மொழிச் சிக்கலைத் தவிர்த்து உணர்ச்சிப்பூர்வமான

நிலைக்குக் கொண்டு செல்ல சரூபப் பாஸ்கா முறை மிகவும் உதவியாக அமைந்தது”6 என்னும் முனைவர் காந்திமேரியின் கருத்து விடை தருவதாய் உள்ளது. இந்நிலை மாறிய பின்னும் கூட பல காலத்திற்கு இயேசு பாத்திரத்திற்கு மட்டும் சுரூபமே பயன்படுத்தப்பட்டது. இன்றும் கூட பல இடங்களில் சிலுவகையில் இறந்த இயேசுவையும், உயிர்த்த இயேசுவையும் காட்ட சுரூபமே பயன்படுத்தப்படுகின்றது. புனிதம் கருதி இவ்வாறு செய்கின்றனரெனினும் பழைய பாவை பாஸ்காவின் எச்சம் இதில் உள்ளது.

**கூத்தாக பாஸ்கா**

பாஸ்கா நாடகம் தொடக்கக் காலத்தில் கூத்து வடிவிலையே நடத்தப் பெற்றது. முனைவர் இந்நாசி அவர்கள் தமது கிறிஸ்தவத் தமிழ்க்கொடை என்ற நூலில் பாஸ்காவை கூத்து என்றே குறிப்பிடுகின்றார். பாடலும், உரைநடையும் கலந்து நடத்தப்பட்டது. இன்றும் கூட அதற்கான எச்சதத்தைக் காணமுடிகின்றது. சாரங்காடு பாஸ்காவில் கட்டியங்காரன் இடையிடையே வருகிறான். அனைத்து பகுதியிலும் இயேசுவின் மரணத்திற்கு முன் இயேசு கைது செய்யப்படுவது தொடங்கி வரும் காட்சிகளில் ஆட்ட அடவுகள் மிகுதியாக இருக்கின்றன.

**மேடை நாடகமாக பாஸ்கா**

முற்காலத்தில் கூத்து வடிவினில் பாஸ்கா நாடகங்கள் இருந்தனவென்றாலும் தற்காலத்தில் கூத்தின் ஒருசில கூறுகளே அதில் காணக்கிடைக்கின்றன. மேடை அமைப்பு, ஒப்பனை, காட்சித்திரைகள், தொழில்நுட்பத்தைக் கையாளும் போக்கு முதலிய பலவும் பெரும்பான்மையும் மேடை நாடக வடிவிலேயே உள்ளது. பாடலும் உரைநடையும் கலந்த போக்கு கூட மிகுதியாக மாறிவிட்டது. இயேசு, மரியா, கைப்பாஸ் உள்ளிட்ட மிக முக்கிய பாத்திரங்கள் மட்டுமே தனது உரையாடலைப் பாடலாக வெளிப்படுத்துகின்றனர். அவை கூட சில இடங்களில் பாடகர் குழுவில் பின்னணியாகப் பாடப்படுகின்றன. இவ்வாறு கூத்து வடிவில் விளங்கிய பாஸ்கா நாடகங்கள் முழுக்க முழுக்க மேடை நாடக வடிவிற்கு மாறிக் கொண்டு வருகின்றது.

**பாஸ்கா நாடகத் தோற்றம்**

பாஸ்கா நாடகமானது தமிழகத்தில் முதன்முதலில் தஞ்சையில் நடைபெற்றிருக்க கூடும். “1653ல் மறைதிரு. பல்தசார் ரோடகோஸ்டா என்பவரால் எழுதப்பட்டுள்ள மதுரை மிஷன் வருடாந்திரக் கடிதத்தில் தஞ்சையில் நடைபெற்றுள்ள பாடுகளின் நிகழ்வு பற்றிய அறியமுடிகின்றது”7. ஆனால் இது முழுமையும் பாஸ்கா நாடக வடிவத்தில் அமையவில்லை. தமிழகத்தில் முதன் முதலில் கி.பி.1702ல் பொrய சஞ்சீவி நாதா; எனப்பட்ட அருட்தந்தை வெனெஷ் புஷே சே.ச. ஆவூரிலே முதன் முதலில் பாஸ்கா நாடகம் நிகழ்த்தப்பட்டது. இது சுரூபங்களால் நடத்தப் பெற்ற பொம்மை பாஸ்காவாகும். இதைத் தொடர்ந்து மேட்டுப்பட்டி, இடைக்காட்டூர், மலையடிபட்டி, பஞ்சப்பட்டி உள்ளிட்ட பல இடங்களிலும் பாஸ்கா நடத்தப்பட்டது. தொடக்கத்தில் தமிழகத்தில், “ஆவூர், சருகணி, கெக்கூரணி, காரங்காடு, சூராணம், புறத்தாக்குடி, இடைக்காட்டூர் மேட்டுப்பட்டி, பஞ்சம்பட்டி, இராயப்பன்பட்டி, சேலம், நாகபட்டினம், மயிலாப்பூர், தஞ்சாவூர், வேளாங்கன்னி, கோட்டாறு, தூத்துக்குடி போன்ற இடங்களிலும் இன்னும் இருநூற்றுக்கும் மேற்பட்ட

இடங்களில் பாஸ்கா நாடகம் நிகழ்ந்தது"8 என்கிறார் முனைவர் காந்தி மேரி. நாடகக் கலையின் தொய்வைப் போலவே கிறித்தவ நாடக வகைமையான பாஸ்காவும் காலப்போக்கில் குறையத் தொடங்கினாலும், நம்பிக்கையின் பாற்பட்ட சடங்கியல் தன்மையும் கலந்து பார்க்கும் ஊர்களில் இன்றும் பாஸ்கா நிழ்த்தப்படுவதைக் காண முடிகின்றது.

**முடிவுரை**

சமயங்கள் தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சிக்குத் துணைபுhpந்தது போல தமிழ் நாடகக் கலையின் வளர்ச்சிக்கும் துணை செய்தன. ஐரோப்பியப் பண்பாட்டுப் பின்னணியில் உருவான கிறித்தவ சமயமும் தமிழ் மண்ணில் தன்னைத் தக்கவைத்துக் கொள்ள தமிழ் கலைகளை குறிப்பாக நாடகக் கலையைக் கருவியாகக் கையாண்டுள்ளது. துமிழ் நாடக மரபில் ஏற்கனவே புழக்கத்தில் உள்ள நாடகங்களைக் கையாண்டு தன் கருத்தைப் பரப்பியதோடு புதிய நாடக வகைமைகளையும் உருவாக்கியுள்ளது. அப்படி உருவாக்கப்பட்ட நாடகங்கள் தமிழ் மண்ணில் வேர்விடக் காரணமாக அமைந்தபோதும், காலப்போக்கில் ஊடக மாற்றங்கள் தமிழ் நாடகக் கலையைல் நிகழ்த்திய தாக்குதல் கிறித்தவ நாடகங்களையும் பாதித்தது. எனினும் சமய நாடகம் என்பதால் கலையைக் கடந்து> நம்பிக்கை கலந்த சடங்கியல் பாங்குடையதாக பாஸ்கா நாடகம் உள்ளதால் இன்றும் சில இடங்களில் ஆண்டுதோறும் நடத்தப்படும் நாடகமாக உள்ளது.

**மேற்கோள் குறிப்பு:**

1. அஸ்வகோஷ், அரங்க ஆட்டம், ப. 226
2. க. காளீஸ்பிரபு, அர்ச். கித்தேரியம்மாள் வாசகக் காப்பு – அமைப்பும் பாடுபொருளும், ப.9
3. dictinoary.reference.com/browse/passover
4. www.urbasndictionary.com
5. www.christnotes.org/dictionary.php.dict=sbd
6. குழந்தை ராஜ், ஆவூர் கோவில் சரித்திரம், ப.12
7. காந்திமேரி, தமிழகத்தில் கிறிஸ்தவ நாடக அரங்குகளில் பாஸ்கா நாடகங்கள், ப.84
8. மேலது, ப.76